கொடுக்காமல், இதுமாதிரி எழுந்திருக்கக் கூடாது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. திரு. த. க.. ராதாகிருஷ்ணன் மற்றும் டாக்டர் மு. காளிராஜன் ஆகியோர்ரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி.கே. ராதாகிருஷ்ணன், (குறுக்கீடு) இது முறையல்ல. பரிதி, என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்னிடம் ?.

திரு. இளம்வழுதி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், எதுவும் அவைக்குறிப்பிலே இருக்காது. நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) தினசரி இதுமாதிரி செய்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உட்காருங்கள், நாள்தோறும் இதுமாதிரி வந்து அதிகமாக நீங்கள் உரிமையை எடுத்துக் கொள்ளக் கூடாது. இது முறையல்ல. முறைகேடாக நடக்கக்கூடாது. காலையில் என்னைச் சந்தித்து இதைப்பற்றி கிளப்பப்போகிறேன் என்று சொன்னீர்களா? (குறுக்கீடு)

திரு. இளம் வழுதி: நான் காலையிலே எப்போதும் சீக்கிரமாக வந்து உங்களை அறையில் சந்திப்பேன். இன்று தாமதமாக வந்தேன். அதனால் சந்திக்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்போதும் முறைகேடாக நடப்பதை திரு. இளம் வழுதி தொழிலாக வைத்துக் கொள்ளக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காரவும். முறைகேடாக நடந்து கொள்வதை நான் அனுமதிக்க முடியாது. நாள்தோறும் இப்படி முறைகேடாக நடந்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இப்படி நாள்தோறும் முறைகேடாக நடந்தால் நான் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. இளம் வழுதி, இது முறையற்ற போக்கு; உட்காருங்கள்.

3. கவன ஈர்ப்பு

(அ) திருமங்கலம் தாலுகா அரசு மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சைக் கூடம் இயங்கவேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு த.க. ராதாகிருஷ்ணன்.

திரு. த.க. இராதாகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, “திருமங்கலம் தாலுகா அரசு மருத்துவமனையில் உள்ள அறுவை

** **மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**

சிகிச்சைக் கூடம் இயங்காத நிலையில் உள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுக்கா மருத்துவமனையில் மயக்க மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணரும் இல்லாத காரணத்தால் 18.2.94 முன்பு வரை பெரிய அறுவை சிகிச்சை (Major Operation cases) தவிர, மற்ற சிறிய அறுவை சிகிச்சைகள் குடும்ப நல அறுவை சிகிச்சைகள் டி.ஏ.டி. அறுவை சிகிச்சைகள் வழக்கம்போல் நடைபெற்றுக்கொண்டு வந்தன. மயக்க மருத்துவ நிபுணர் டாக்டர் விஜய குமார் எம்.டி.டி.ஏ., 21.10.1993 அன்று பணியில் சேர்ந்தார். 18.2.94 முதல் மருத்துவர் மருபாண்டியன்., எம். எஸ்., பணியில் சேர்ந்ததில் இருந்து எல்லாவித பெரிய அறுவை சிகிச்சைகளும் நடைபெற்று வருகின்றன.

திரு. த. க. இராதாகிருஷ்ணன்: அனைவரும் நல்வாழ்வு என்ற உயர்ந்த கருத்துக்கு இணங்க சிறப்பான முறையில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புனித ஆட்சியில் திருமங்கலம் தாலுகா அரசு மருத்துவமனையில் நீண்டகாலமாக மயக்க மருத்துவ நிபுணர், அனெஸ்திட்டீஸ் அறுவை சிகிச்சை நிபுணர், சர்ஜன் இல்லாத குறை இருந்தது. அந்தக் குறையை நீக்கிய தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே வேளையிலே அந்த ஆப்பரேஷன் தியேட்டரில் ஜெனரேட்டர் சரி செய்யப்பட வேண்டும். ஏனென்றால் அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருக்கின்ற வேளையிலே அந்த ஜெனரேட்டர் இயங்கினால் தான் தொடர்ந்து அந்த ஆப்பரேஷன் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கும். ஆகையால் அந்த ஜெனரேட்டரை சரி செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா மருத்துவமனையில் மயக்க மருத்துவம் மற்றும் மருத்துவ சிகிச்சை நிபுணர் இல்லாத

காரணத்தினால், அங்கே பெரிய அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை என்ற ஒரு காரணம் இருந்தாலும்கூட, அங்கே இருக்கின்ற மயக்க மருந்து கொடுக்கும் கருவி பழுதுபட்டிருப்பதால்தான் பெரிய அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை என்பது விவர அறிக்கையில் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அந்த மயக்க மருந்து கொடுக்கின்ற அந்த கருவியைப் பழுது பார்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனஸ்தடிஸ்ட்டே இல்லாத சூழ்நிலையிலே அந்த கருவி பயன்படுத்தப்படாமல் இருந்திருக்கலாம். எனவே, அது பழுதுகூட அடைந்திருக்கலாம். ஆனால், இப்போது அதற்காக மருத்துவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதைச் சீர் செய்வதற்கான நடவடிக்கையை அவர் மேற்கொண்டு இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இருந்தால் அரசாங்கம் அதை கவனித்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தைச் சார்ந்த மீனவர் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு அ. செல்வராசன், திரு. ஜி. பழனிசாமி, திரு. எஸ். திருநாவுக்கரசு ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தைச் சார்ந்த மீனவர் ஆறுமுகம், வயது 30, மீன் பிடிக்கச் சென்றபொழுது இலங்கைக் கடற்படையினரால் துப்பாக்கியால் சுடப்பட்ட சம்பவம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

3.4.1994 அன்று டிஜெசி 963-ஆம் எண் கொண்ட இயந்திரப் படகில் நாகூரைச் சார்ந்த நான்கு மீனவர்கள் கோட்டைப்பட்டினம் கடற்கரைப் பகுதியில் சர்வதேசக் கடல் எல்லைக் கோட்டைக் கடந்து மீன்பிடித்துக்